*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*12 11 2025 6.30*
*புதன்கிழமை மாலை*
*மாநிலச் செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

*1) தில்லி கார் குண்டுவெடிப்பிற்கு காரணமானவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*
*2) தூய்மைப் பணியாளர்களின் நியாயமான மூன்று கோரிக்கைகளையும் திமுக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.*
*3) தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் இதுவரை 78 சதவீத வாக்காளர்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.*
*4) பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதியில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்ட தடையை, அடுத்த மாதம் 2 ஆம் தேதி வரை நீட்டித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*
*5) ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*இனி விரிவான செய்திகள் ---*

*தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் தொடர்புடையவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*புதுதில்லி மருத்துவமனையில் இந்த சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களை இன்று சந்தித்து ஆறுதல் தெரிவித்த போது பிரதமர் இவ்வாறு கூறினார்.*

*காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.*

*பூட்டானில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு புதுதில்லி திரும்பிய பிரதமர், நேரடியாக மருத்துவமனைக்கு சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>><><><><<*

*தூய்மைப் பணியாளர்களின் நியாயமான மூன்று கோரிக்கைகளையும் திமுக அரசு நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வாழ்வாதாரத்திற்காக போராடும் தூய்மைப் பணியாளர்களை திமுக அரசு ஏமாற்றி வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.*

*முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, தூய்மைப் பணியாளர்களுக்கு ஆதரவாக செயல்பட்டதோடு, தேர்தல் வாக்குறுதி அளித்ததையும் அவர் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*ஆனால், தற்போது தூய்மைப் பணியாளர்களின் பணிகளை தங்களுக்கு வேண்டப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு திமுக அரசு தாரைவார்த்துள்ளதையும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*தூய்மைப்பணியாளர்கள் மீது அக்கறை இருந்தால் அவர்களின் கோரிக்கைகளை முதலமைச்சர் நிறைவேற்ற வேண்டும் என்றும் டாக்டர் எல் முருகன் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>><><><><<*

*தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.*

*இதுவரை 78 சதவீத வாக்காளர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் விநியோகப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*இதன்படி வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள 6 கோடியே 41 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களில் 5 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இப்பணிகளில் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>><><><><<*

*பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதியில் குடியிருப்பு வளாக கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளக்கூடாது என பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவினை அடுத்த மாதம் 2 ஆம் தேதி வரை நீட்டித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*இதுதொடர்பான வழக்கு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு எம் எம் ஸ்ரீவத்சவா, நீதிபதி அருள்முருகன் அமர்வு முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு வில்சன், சதுப்பு நிலத்தின் எல்லையை துல்லியமாக தீர்மானிப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.*

*இதுதொடர்பான வழக்கின் விசாரணையை உச்சநீதிமன்றம் அடுத்த மாதம் 2 ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளதால், இவ்வழக்கின் விசாரணையையும் ஒத்திவைக்க வேண்டும் என்று அவர் கோரினார்.*

*இதனை ஏற்ற நீதிபதிகள், வழக்கின் விசாரணை அடுத்த மாதம் 3 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.*

*>><><><><<*

*தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றி இருப்பதாக மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் கூறியுள்ளார்.*

*நாமக்கல் மாவட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*திட்டங்கள் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படுவதை திமுக அரசு உறுதி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின்கீழ், விடுபட்டவர்களில் தகுதிவாய்ந்தவர்களுக்கு அடுத்த மாதம் முதல் இந்த தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.*

>><><><><<

*மாலியில் தமிழகத்தைச் சேர்ந்த 5 பேரை பயங்கரவாதிகள் கடத்திச் சென்றதாக வெளியான செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், உள்நாட்டு பிரச்சினை காரணமாக ஆயுதம் ஏந்திய பயங்கரவாதிகள் இவர்களை கடத்திச் சென்றிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கியுள்ள தமிழர்களை பாதுகாப்பாக மீட்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், மத்திய -மாநில அரசுகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும், திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.*

>><><><><<

*ககன்யான் திட்டத்தின் ஒரு பகுதியாக விண்கலம் பாதுகாப்பாக பூமிக்கு திரும்புவதற்கான சோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.*

*பாராசூட்டை பயன்படுத்தி விண்கலத்தை கடலில் மெதுவாக தரையிறக்குவதற்கான இந்த சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளதாக இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் –வெங்கடேஸ்வரன் – 60 செகண்ட்ஸ்)*

>><><><><<

*ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் - 48 செகண்ட்ஸ்)*

>><><><><<

***மாவட்டச் செய்திகள்***

*கள்ளக்குறிச்சியில் மாவட்ட ஒருங்கிணைப்பு வளர்ச்சி மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் இன்று ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.*

-------------------

*கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் போதைப்பொருள் வைத்திருந்த கேரள மாநிலத்தைச் சேர்ந்த இருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.*

----------------

*ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள தனியார் கல்லூரியில் தமிழ் கனவு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.*

----------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் உள்ள செண்பகவள்ளி அம்மன் கோயிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

----------------

காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ்களை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியின் கலப்பு குழு பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

டாக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா, சீனாவை வென்றது.

-----------------

*Bondi* ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Rathika Seelan* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அவர், *11-7, 11-3, 11-3* என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் *Anantana Prasertratanakul*-ஐ வென்றார்.

*>> End of News <<*